உ
சிவமயம்



# வேதவனம்



தொகுப்பாசிரியர் :

## அப்பாக்குட்டி செல்வராஜா

கல்வயல்

17.12.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# வேதவனம்

சாவகச்சேரி கல்வயல்

**வேதவன விநாயகர் ஆலய**

## தலவரலாறும் பஜனைப் பாடல்களும்

தொகுப்பாசிரியர்:-
**திரு. அப்பாக்குட்டி செல்வராஜா**
கல்வயல், சாவகச்சேரி.
17-12-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன
இரண்டாவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
வழங்கிய

# அருளாசிச் செய்தி



சாவகச்சேரி கல்வயல் வேதவன விநாயகர் அருளால் வேதவனம் என்னும் பெயரில் ஆலயத் தலவரலாறும் பஜனைப்பாடல்களும் எனும் நூல் தொகுக்கப்பெற்று வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பல ஆலயங்களைக்கொண்ட சாவகச்சேரிப் பிரதேசத்தில் கல்வயல் என்னும் கிராமத்தில் விநாயக வழிபாடு நீண்டகாலமாக அனைவராலும் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் வேதவனத்தில் விநாயகப்பெருமான் எழுந்தருளி இருந்து வேண்டுவார் வேண்டுவனவெல்லாம் வழங்கிக்கொண்டிருக்கின்றான். விநாயகனுடைய பெருங்கருணையை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் தலவரலாறு நூலாகவெளிவருவது அனைவருக்கும் மகழ்ச்சி தருகின்றது. நீண்ட குருத்துவப்பாரம் பரியத்துடன் இவ்வாலய வழிபாடுகள் நடைபெற்றுவருவது சிறப்பம்சமாகும். விநாயகர்மேல் பாடப்பெற்ற பஜனைப்பாடல்களும் தல வரலாற்று நூலில் வெளிவருவது விநாயகர் அடியார்களுக்கு பாடி மகிழ்வதற்கு சாலப்பொருத்தமாகும். இங்ஙனம் இந்நூலைத் தொகுத்து வெளியிடும் திருவாளர் அப்பாக்குட்டி செல்வராஜாவின் முயற்சியை வாழ்த்திப்பாராட்டுவதோடு அனைவரும் இதனை ஓதிமகிழ இறைவனைப்பிரார்த்தித்து அருளாசி கூறி அமைகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
**ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி – கல்வயல்

திரு. **வேதவனம் குமாரசாமி** அவர்கள்

வழங்கிய

# ஆசிச்செய்தி



"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" எல்லாம் வல்ல வேதவன விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களைத் தலைமேற்கொண்டு சைவத்தையும் தமிழையும் வளர்த்த கல்வயல் பதியிலே வீற்றிருக்கும் வேதவனத்து விநாயகனின் வரலாறு கூறும் இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன்.

அப்பாக்குட்டி செல்வராஜாவின் இம்முயற்சியானது பாராட்டுதற்கு உரியது. சொல்லில் அடங்காத துன்பங்கள், இடப்பெயர்வுகளைச் சந்தித்த எம்மண்ணில் பலசான்றுகள் அழிவடைந்தும் தொலைந்தும் விட்டன. அவ்வகையிலே எனது சகோதரன் கோவிலின் வரலாறு, ஊஞ்சற் பாட்டு, பக்திப்பாமாலை என்பனவற்றை உரியமுறையில் தொகுத்து வரலாற்று ஆதாரங்களை தொடர்புடையோரிடம் வினாவி தொகுத்து வெளியிடுவதில் மட்டற்ற ஆனந்தம் அடைகின்றேன்.

திரு. அ. செல்வராஜா தன்னகத்தே கொண்ட நீண்டநாட் கனவை மெய்யாக்கி இம்மலரை வெளியிடுகின்றார். இம்மலர் மலர்ந்து மணம்பரப்ப வேதவன விநாயகரின் ஆசிவேண்டி வணங்குகின்றேன். இம்மலருக்கு ஆக்கங்களை இனிய தமிழிலே அழகாக ஆக்கி வழங்கிய திரு.செல்வராஜாவின் புதல்வன் திரு.செ.சுதாகரன் அவர்களுக்கும் எனது நன்றிகளும் பாராட்டுதல்களும் உரித்தாகுக.

நன்றி

**வேதவனம் குமாரசாமி**
கல்வயல்,
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்,
யாழ்ப்பாணக் கம்பன் கழகத்தலைவர்,
"செந்தமிழ்ச் சொல்லருவி"

## திரு. ச.லலீசன் அவர்கள்
வழங்கிய

# வாழ்த்துச்செய்தி.



கல்வயற்பதி வாழும் மக்கள் விநாயகர் வழிபாட்டில் ஊறித்திளைப்பவர்கள். வேதவன விநாயகர் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர், சித்தன்மாவடிப் பிள்ளையார், ஆயிலடி வீரகத்தி விநாயகர் என நான்கு விநாயகர் ஆலயங்கள் இப்பதியின் செழிப்பிற்குக் காலாகவுள்ளன.

இறுக்கமான சைவ ஆசாரங்களைக் கைக்கொள்ளும் பல இனிய உள்ளங்கள் இப்பதியில் இன்றும் வாழ்கின்றனர். யாழ் குடாநாட்டில் மாமிசம் உண்ணாத சைவர்களைக்காண விழைவோர் கல்வயற்கிராமத்தை முன்னிறுத்திப் பார்க்கின்றமை இதற்குத்தக்க சான்றாகும். பௌராணிக மரபைப் பேணுகின்ற பெரியவர்கள் இவ்வூரில் வாழ்ந்தும் வாழ்ந்து கொண்டும் இருக்கின்றமையே இந்நிலைமைக்கான காரணமெனலாம்.

புராணமேதை அப்பாக்குட்டி உபாத்தியாயரைப்பற்றி எனது பிறப்பிடமாகிய சரசாலையூரவர்கள் அடிக்கடி பேசக் கேட்டிருக்கின்றேன். பௌராணிகப் பயிற்சியை என்னுள் விதைத்தவர்களான அமரர் க. முத்துக்குமாரு உபாத்தியாயர், அமரர் சி. வைரவப்பிள்ளை உபாத்தியாயர் போன்றோர் கல்வயற்பதியினரின் பௌராணிக மரபு குறித்துப் பெருமையாகப் பேசுவர்.

இந்நூலை எமக்காக நல்கும் திரு.அ.செல்வராஜா அவர்கள் புராணமேதை சி. அப்பாக்குட்டியின் இளைய புதல்வர். சைவ விழுமியங்களை வாழ்விற் கைக்கொள்பவர். எக்காரியத்தை ஆற்றுவதாயினும் வேதவனத்தான் தாழ் பணிந்தபின் துணிபவர். அவரது புதல்வராகிய செ.சுதாகரன் கவித்துவம் மிக்க பாடல்களை ஆக்குவதில் புலமை பெற்றவர். நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர். எனது பால்ய நண்பர். இவர்களது பெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியால் வேதவனம் என்ற பெயருடன் வேதவன விநாயகர் குறித்தான நூல் வெளிவருகின்றது.

சைவமக்கள் தமது இருப்பையும் முன்னவர் வரலாறு களையும் சரிவர ஆவணப்படுத்தி வைத்திருக்கவில்லை என்ற பெருங்குறை வரலாற்றாசிரியர்களால் சுட்டிக்காட்டப்படுவதுண்டு. இக்குறையை நீக்குவதற்கு தற்போதைய சந்ததியினர் முயற்சிக்கும் போது கருத்துப்பேதங்கள் ஏற்படும் நிலைமைகள் உருவாவதுங் கண்கூடு. இது தவிர்க்கவியலாதது.

வேதவனப்பிள்ளையாரின் தலவரலாற்றை கல்வயற்பதிக்குச் சொந்தக்காரரும் ஈழத்தின் தலைசிறந்த சிவாச்சாரியருமாகிய சிவஸ்ரீ கி.சோமசுந்தரக்குருக்கள் எழுதியுள்ளார். வேதவனத்தானின் மெய்தீண்டிப் பூசித்த பெருமைக்குரிய அவர் மிகநீண்ட காலம் இவ்வாலயப் பணிகளை மேற்கொண்ட சிறப்பிற்குரியவர். வரலாற்றுணர்வுடன் செய்திகளை ஆவணப்படுத்தியுள்ளார். இது இந்நூலின் நிலைத்திருப்பிற்கான அத்திபாரமாக அமைந்துள்ளது.

ஆலயத்தின் ஊஞ்சற்பாக்கள் மட்டுவில் பெற்ற மாமணியாகத் திகழ்ந்த பண்டிதமணி ஐயாவால் எழுதப்பெற்றவை. ஆலயச்சிறப்புக்கள் குறித்துக் கவிஞர் கல்வயல் செ.சுதாகரன் பாக்களை வடித்துள்ளார்.

மரபுக் கவிதைகளை எழுதுவதில் ஆர்வங்கொண்ட கவிஞர் செ. சுதாகரன் ஓசை நயங்கொண்ட பாக்களைப் படைத்துள்ளார். இவைகூட ஒரு காலத்திற்குரிய ஆலயச் சூழலைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இந்த வகையில் வரலாற்றுப் பதிவுகளாகின்றன. இவை தவிரப் பஜனைப்பாக்களும் நூலை அலங்கரிக்கின்றன.

அர்ச்சனை பாட்டேயாகும் என்பது சேக்கிழார் வாக்கு. வேதவன விநாயகரின் அடியவர்கள் எங்கிருந்தாலும் விநாயகரை நினைத்து வழிபாடாற்ற இந்நூல் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

இவ்வெளியீடு சிறக்கவும் சைவ உலகினர் இதனை ஏற்றுப் பயன்கொள்ளவும் நல்வாழ்த்துக்கள்.

அன்புடன்
**ச.லலீசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனைகள் பலபடைத்திட

# எம் ஆசிகள்.......



மனிதனாகப் பிறந்தவர்கள் பெறுமானம் மிக்கவர்களாக விளங்கவேண்டும். எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே என்பதும் வாழும் பிள்ளைகளை மண் விளையாட்டிலே தெரியும் என்பதும் ஒரு பழமொழி. பிள்ளை ஒன்று பெரியவனாக வளர்ந்து எத்தகைய சிறப்புக்களைப் பெற்றவனாக வருவான் என்பதை அவனது பிள்ளைப் பருவங்களிலேயே செய்கின்ற செயல்களில் இருந்து நாம் அறிந்து கொள்ள முடியும். அந்த வகையில் குழந்தை சாதனையில் மிக்கவனாக வாழவேண்டுமாயின் சிறந்த கல்வியைப் பெறவேண்டும். 'மனிதனுள் ஆழ்ந்து கிடக்கின்ற பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி' என கல்விக்கு வரைவிலக்கணம் கூறவந்த விவேகானந்தர் குறிப்பிடுகின்றார். கல்விச் சிந்தனைகள் ஒருவனது வாழ்வில் தொடர்ந்துவரும்போது அவன் பூரணத்துவம் அடைகின்றான். இன்றைய இளைஞர்கள் மத்தியில் இச் சிந்தனைகள் வளர்த்தெடுக்கப்பட்டால் அவர்கள் தம்வாழ்வின் பிற்பகுதியில் பெறுமானம் மிக்கவர்களாக வளர்ந்துவிடுகின்றார்கள். அத்தகைய பெறுமானம் இந்த இளைஞன் செல்வராஜா சுதாகரன் அவர்களுக்குக் கிட்டியுள்ளது என்பது எனது கருத்தாகும். அவ்வழியில் மென்மேலும் வெற்றிநடைபோட நாம் வேதவன விநாயகனின் ஆசியை வேண்டுகின்றோம்.

அவ்வழியில் ஈழத்திருநாட்டின் சகல வளங்களும் சிறப்பும் பெற்ற தென்மராட்சியில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கல்வயலூரின் நடுநாயகனாக விளங்கும் வேதவன விநாயகனின் வரலாறும் பஜனைப்பாடல்களும் திருவூஞ்சற் பாடல்களும் உள்ளடங்கிய 'வேதவனம்' என்னும் நூலைப்படைத்த 'வயலூரான்' அவர்களுக்கும் அவரது கன்னிப்படைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கி ஆக்கங்களை வழங்கி யோருக்கும் இவற்றைத் தொகுத்து வழங்கி இந்நூலை வெளியிட முன் வந்த திருவாளர் அப்பாக்குட்டி செல்வராஜா அவர்களுக்கும் வேதவன விநாயகரின் தர்மகர்த்தா சபையின் சார்பாகவும் எனது சார்பாகவும் மிகுந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இந்நூலை ஆக்கிப் பெருமைபெறும் 'வயலூரான்' என்னும் செல்வராஜா சுதாகரன் மேலும் சாதனை படைத்துப் பல ஆக்கங்களை உருவாக்க எனது நல்லாசிகளை வழங்கி வாழ்த்து கின்றேன்.


**மார்க்கண்டு மகேந்திரன்** ஜே.பி
இளைப்பாறிய உதவி முகாமையாளர்
(இ.போ.ச பருத்தித்துறை சாலை)

செயலாளர், தர்மகர்த்தா சபை,
வேதவனப்பிள்ளையார் கோவில்,
கல்வயல், சாவகச்சேரி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை



ஈழமணித்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் தென்பாகத்தில், தென்மராட்சி என்னும் திவ்வியபதியில் சாவகச்சேரி நகரின் வடபாகத்தில் கல்வயல் எனும் கிராமம் அமைந்துள்ளது. சைவத்தமிழ்ப் பண்பாட்டைப் பேணிக்காத்துவரும் பண்புடைய மக்கள் வாழும் இக்கிராமத்திலே பல்வேறு ஆலயங்கள் அமைந்துள்ளன. அவற்றுளே தலைசிறந்த வரலாற்றுப் பின்னணியையும் அற்புதச் சிறப்புக்களையும் கொண்டமைந்தது கல்வயல் அருள்மிகு வேதவன விநாயகர் ஆலயம். மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என விளக்கப்படுகின்ற ஆலயத்திற்குரிய அத்தனைச் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டது இவ்வாலயம்.

"வேதவனத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்" என முன்னோர்கள் விநாயகனருளை விதந்து கூறியுள்ளார்கள். அத்தகைய சிறப்புக்கள் கொண்ட எல்லாம் வல்ல வேதவன விநாயகன் திருத்தாள்களைப் பணிந்து அவன் புகழ்கூறும் இவ்வரிய நூலினை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.
இந்நூலின் கண்ணே

1. ஆலய வரலாறு
2. பஜனைப்பாடல்கள்
3. ஆலயத்தின் திருவூஞ்சற் பாடல்கள்
4. ஆலயசிறப்புக்களை விளக்கும் பாடல்கள்

என்பன அடங்கியுள்ளன. அவனருளாலே அவன்தாள் வணங்கி என்பது போல இவ்வாறானதொரு நூலினை வெளியிடல் வேண்டும் என்ற எண்ணக்கருவை எனது மனத்தில் அப்பன் விநாயகன் தோற்றுவித்தான். இவ்வாலயத்திலே 1981-ம் ஆண்டுமுதல் விநாயகவிரதம் அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றமை அனைவரும் அறிந்தவிடயமாகும். அன்றுமுதல் தொடர்ந்து விநாயகவிரத இலட்சார்ச்சனை உபயத்தை நானும் எனது பிள்ளைகளும் செய்துவருகின்றோம். தொடர்ந்து இடம்பெற்று வந்த இந்த விநாயகவிரத இலட்சார்ச்சனை நிகழ்வு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 2000-ம் ஆண்டுமுதல் 2001-ம் ஆண்டுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலகாலம் தடைப்பட்டு மீண்டும் 2002-ம் ஆண்டுமுதல் ஆரம்ப மாகியது. அந்தக் காலத்தில் ஆலயத்தில் அர்ச்சகராகக் கடமை யாற்றிய பிரம்மஸ்ரீ சு. மஹாதேவசர்மா(சுதா ஐயா) அவர்கள் விநாயகவிரதம் இவ்வளவு சிறப்பாக நடைபெறும் இடத்தில் கட்டாயம் கஜமுகாசுர சங்காரம் செய்தல் சிறப்பாக இருக்கும் என எம்முடன் தொடர்பு கொண்டு தெரிவித்து எம்மை சம்மதிக்கவைத்து இந்நிகழ்வை ஆலயத்தில் 2004-ம் ஆண்டுமுதல் ஆரம்பித்து வைத்தார். அவ்வாண்டு முதல் தொடர்ந்து ஈராண்டுகள் கஜமுகாசுரன் உருவச்சிலை இரவலாகப் பிற ஆலயங்களில் பெறப்பட்டு நடாத்தப்பட்டது. தொடர்ந்து இரவலாகப்பெறப்படுவதை விரும்பாத விநாயகர் புதியதொரு கஜமுகாசுரன் சிலை தனக்கு வேண்டும் எனஎண்ணி என்மனத்திலும் அவ்வெண்ணத்தைத் தோற்றுவித்து அதற்கான பொருளாதார வளத்தையும் எனக்கருளி 2006-ம் ஆண்டு அதனைச் செயல்வடிவமாக்கிக் காட்டினான். இத்தகைய ஒரு எண்ணக்கருவை ஏற்படுத்திய பிரம்மஸ்ரீ சு.மஹாதேவசர்மா(சுதா ஐயா) அவர்களுக்கு விநாயகரின் திருவருள் என்றும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வாறு தனக்கு வேண்டியவற்றையெல்லாம் எம்மூலம் எம்பெருமான் நிறைவேற்றிக் கொள்கின்றார் என்றால் அது மிகையாகாது. அந்தவகையில் அவனருளோடு இன்று இந்த வரலாற்று நூல் மலர்ந்துள்ளது. இவ்வாறான நிலையில் இது சம்பந்தமாக ஆலயத்தின் முன்னாள் பிரதமகுரு சிவஸ்ரீ கி.சோமசுந்தரக்குருக்கள் அவர்களிடம் தொடர்பு கொண்டபோது தனது உடல்நலமற்ற நிலையினையும் பொருட்படுத்தாது மிகுந்த உற்சாகத்தோடு ஆலய வரலாற்றினைத் தேடித் தொகுத்து எழுதி வழங்கியதோடு ஆலயம் சம்பந்தமான சில புகைப்படங்களையும் தந்துதவினார். அத்தோடு இதுசம்பந்தமான ஆலோசனைகளையும் அவ்வப்போது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழங்கினார். அவருக்கு எமது நன்றிகள் என்றென்றும் உண்டு. ஆலயம் சம்பந்தமான ஒரு வரலாற்று நூலாக இது அமையவேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியெம்மை உற்சாகப்படுத்தினார்.

இந்நூலிலே சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள் அவர்களால் எழுதப்பெற்ற வேதவன விநாயகரது ஆலய வரலாறும் எனது மகனான திரு. செல்வராஜா சுதாகரன் அவர்களால் எழுதப்பெற்ற ஆலயச் சிறப்புக்கள் அடங்கிய கவிதைகளும், ஆலயத்தில் படிக்கப்படக் கூடிய விநாயகர் பஜனைப்பாடல்களும் அடங்கியுள்ளன. அத்தோடு அழிந்து போகாமல் அச்சுருவில் நீண்டகாலம் நிலைத்து இருக்கவேண்டும் என சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள் அவர்கள் வழங்கிய ஆலோசனைக்கமைவாக வேதவன விநாயகரது திருவூஞ்சல் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.


இவ்வரிய நூலினை இலவசமாகவே நான்வெளியிட விரும்பியபோதும் அவ்வாறு செய்வது நூலின் மதிப்பைக் குறைத்துவிடும் என்பதாலும் பெரும் பொருட்செலவைக் குறைப்பதற்காகவும் இந்நூலின் முடிப்பு விலையில் 50 வீதத்தை அன்பளிப்பாகப் பெறுவதே சாலச்சிறந்ததென்ற பலரது கருத்துக் களுக்கும் மதிப்பளித்து இதற்கான விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து அடியார்களும் எனது இம்முயற்சிக்கு ஊக்கமளித்து என்னை உற்சாகப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்வதோடு இந்நூல் வெளிவர உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு அமைகின்றேன்.

நன்றி

**அப்பாக்குட்டி செல்வராஜா**
கல்வயல், சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி - கல்வயல்

# அருள்மிகு வேதவனப்பிள்ளையார் ஆலய

# தலவரலாறு

தொகுப்பு:- வேதாகம ஜோதி . கிரியாகானகலாமணி
**சிவஸ்ரீ. கி. சோமசுந்தரக்குருக்கள்** J.P மட்டுவில்



திகடசக்கரச் செம்முக மைந்துளான்
சகடசக்கரத் தாமரை நாயகன்
அகடசக்கர வின்மணி யாவுறை
விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

வடமாகாணம் தென்மராட்சியில் சாவகச்சேரி நகரம் தமிழ், சைவம், விவசாயம், தெய்வீகம் என்பவற்றால் மேலோங்கிய நகரமாகும். அந்நகரத்தின் நாப்பண் கல்வயல் எனும் ஒரு பழம்பெரும்பதியுண்டு. அப்பதி ஆலயங்கள், சைவப்பண்பாடு, தெய்வீக வழிபாடு, விவசாயம் என்பவற்றால் உயர்ந்தபதியாகும். சிறந்த கல்விமான்கள், புராணிகர்கள், விவசாயமன்னர்கள் வாழ்ந்த, வாழ்கின்ற இடமும் ஆகும். இக்கல்வயல் பதியிலே நான்கு பிள்ளையார் ஆலயங்கள் உண்டு. அவற்றில் வேதவனப்பிள்ளையார் கோவில், பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் கோவில், கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் கோவில் (புலுட்டையன் பிள்ளையார் கோவில்) ஆகிய மூன்று ஆலயங்களும் பூர்வீகத்தாலும், வழிபடும் அடியார்கள் உறவினாலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இவற்றில் வேதவனப்பிள்ளையார் கோவில் வரலாற்றைப்பற்றி சிறிது சிந்திப்போம்.

கல்வயலில் உள்ள பிள்ளையார் ஆலயங்களில் மிகவும் பழமை வாய்ந்தது வேதவனப்பிள்ளையார் ஆலயமாகும். கர்ணபரம்பரையின் படியும், நம்முன்னோரின் வரலாற்றின்படியும் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆதிசைவர் பரம்பரையிலுள்ள குருக்கள் ஒருவரால் இந்தியாவில் வேதாரணியத்திலிருந்து பூஜித்துக் கொண்டுவரப்பட்ட பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவச்சிலையை கல்வயலில் விதானையார் இராமர் என்பவரது காணியில் அவரது அனுமதியோடு ஒரு பலாமரத்தின்கீழ் சிறிய ஆலயமொன்றை அமைத்து அப்பெருமானை பிரதிஷ்டை செய்து பூஜித்து வந்தார். இதனால் அப்பெருமானுக்கு வேதவனப்பிள்ளையார் என்ற நாமமும், பலாமரம் தலவிருட்சமாக அமைந்ததனால் பனசக்கல்வயல் விநாயகர் என்ற நாமமும் (பனசம் என்றால் பலாமரம் எனப்படும்) ஏற்பட்டது. அத்தோடு விதானையாரின் காணியில் அமைந்ததனால் விதானையார் கோவில் என்ற நாமத்தாலும் அழைக்கப்பட்டது. பலாமரத்தின் கீழ் அமைந்த ஆலயம் என்பதை விளக்குவதற்காகவே பண்டிதமணி அவர்கள் எழுதிய ஊஞ்சல் பாடலில் பனசக்கல்வயல் விநாயகர் எனக்குறிப்பிட்டுள்ளார். இவ்வண்ணம் சைவக்குருக்கள், இராமர் பரம்பரையினர் ஆலய நிர்வாகத்தையும், திருப்பணிகளையும் நடாத்தி ஆலயத்தையும் பராமரித்து வந்தனர்.

இவ்வண்ணம் ஆலயபரிபாலனம் தொடர்ந்து நடைபெற்று வந்தது. அக்காலத்தில் விதானையார் பரம்பரையிலுள்ள திரு. ப. முருகேசு என்பவர் ஆலயத்தை நிர்வகித்து நித்திய பூஜையையும் தாமே செய்து வந்தார். இக்காலங்களில் கந்தபுராணபடனம், திருவாதவூரடிகள் புராணம் என்பன அந்தந்தக் காலத்திற்கேற்ப படிக்கப்பட்டும் அதற்குரிய விஷேடங்கள் நடைபெற்றும் வந்தன. ஆலயத்தின் சூழலிலுள்ள அறிஞர்கள் திரு. ப. முருகேசு அவர்களுடன் சேர்ந்து இவற்றை நடாத்தி வந்தார்கள். திரு. ப. முருகேசு அவர்கள் விநாயகப்பெருமான் மீது கொண்ட பக்தி காரணமாக விநாயகபுராணத்தை நித்தியம் ஓதியும். பூஜை நேரங்களில் அப்புராணத்தில் உள்ள துதிகளைப் பாராயணம் செய்தும் வழிபட்டு வந்தார்.

விவசாயத்திலும் சிறந்த மன்னராக விளங்கிய திரு.ப.முருகேசு அவர்கள் கோவில் சம்பந்தமான சகல விஷயங்களையும் தாமே செய்யத்தக்க திறமையும் உடையவர். இக்காலங்களில் மார்கழி மாதம் திருவெம்பாவை பத்துநாட்களும் காலையில் திருவெம்பாவை பூஜையும், மாலையில் அபிஷேகம், உற்சவம் என்பன நடைபெற்று வந்திருக்கிறது. திருவாதிரை நந்நாளன்று மாலையில் அபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்று தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா திருவூஞ்சல் என்பன நடைபெற்று வந்தது. திரு. முருகேசு அவர்கள் காலத்திலும் அதற்கு முன்பும் பிராமணக் குருக்களான உடுவில் சிவஸ்ரீ ஏரம்பமூர்த்திக் குருக்கள் அவர்கள் உற்சவங்களை நடாத்தி வந்துள்ளார். அவர் காலத்தின் பின்பு எமது தந்தையாரான மட்டுவில் சிவஸ்ரீ கிருஷ்ண சாமிக்குருக்கள் அவர்கள் (பொன்னுச்சாமிக் குருக்கள்) திரு.முருகேசு அவர்களுடன் இணைந்து நடாத்தி வந்துள்ளார். திரு.முருகேசு அவர்கள் எமது தந்தையாரிடத்தில் மிகுந்த அன்பும், பக்தியும் உடையவர். அதன்மூலம் ஆலயத்தின் முன்னேற்றமான சகல விஷயங்களையும் குருக்கள் அவர்களுடன் ஆலோசித்தே நடாத்தி வந்துள்ளார். இவர்கள் காலத்தில் இரண்டு கும்பாபிஷேகங்கள் நடைபெற்றதாக வரலாறு தெரிவிக்கின்றது. திரு. முருகேசு அவர்கள் வயோதிபம் அடையவே ஆலய நித்திய பூஜையை மீண்டும் சைவக்குருக்கள் பரம்பரையில் உள்ள திரு. நடேசையா அவர்கள் நடாத்தி வந்தார்கள். ஆலய நைமித்திய விழாக்கள் எமது தந்தையாரால் நடாத்தப்பட்டு வந்தன. திரு. முருகேசு அவர்கள் தம்முடைய வயோதிப நிலையை நினைத்து ஆலயத்தின் நிர்வாகப்பொறுப்பை விதானையார் பரம்பரையிலுள்ள தமது தமையனாரின் மகனான திரு வா. கதிரேசபிள்ளை அவர்களிடம் ஒப்படைத்தார். திரு. வா. கதிரேசபிள்ளை அவர்கள் அப்பொறுப்பை பெருமானுடைய கைங்கரியமாக சிரமேற்கொண்டு கல்வயல் வாழ்மக்களுடன் இணைந்து நன்கு நடாத்தி வந்தார். ஆலயத்திற் குரிய காணிகள், வயல்கள் என்பனவற்றின் வருமானத்தைக் கொண்டு ஆலய நித்திய பூஜையை நடாத்தி வந்தார். ஆலயத்தின் விஷேட வைபவங்களையும், உற்சவங்களையும் கல்வயல் வாழ் மக்களும் திரு.வா.கதிரேசபிள்ளை அவர்களின் உறவினர்களும் நடாத்தி வந்துள்ளார்கள். ஆலயத்தில் முருகு பக்தர் ஒருவர் பெருமானுடைய திருவருளோடு அருள்வாக்கு சொல்லி மக்களுக்கு நோய்நொடி களை தீர்த்துள்ளார். இதனால் முருகமூர்த்தி கோவில் எனும் நாமமும் பழமையாக அமைந்துள்ளது.

இவ்வண்ணம் ஆலய நித்திய நைமித்தியம் நடைபெறும் காலத்தில் ஆலய முன்னேற்றம் கருதி கல்வயலூர் பெரியார்களான திரு. பண்டிதர் வேலுப்பிள்ளை சகோதரர் குடும்பத்தினர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதபூஷணம் சி. விநாசித்தம்பி குடும்பத்தினர், திரு.சின்னத்துரை ஆசிரியர் (செல்லத்துரை வாத்தியார்) குடும்பத்தினர், புராணமேதை சி.அப்பாக்குட்டி அவர்கள் , புராணமேதை ச.வாரித்தம்பி அவர்கள் விவசாய மன்னன் திரு.வே.தம்பிப்பிள்ளை (செல்லையா), திரு. கு. கார்த்திகேசு அவர்கள் இன்னும் பல பேரறிஞர்கள் ஆகியோர் திரு.வா.கதிரேசபிள்ளை அவர்களுடன் இணைந்து பரிபாலனசபை ஒன்றை நிறுவி அதன்மூலம் பல திருப்பணிகளை செய்தார்கள். தாங்கள் தங்கள் குலதெய்வமாகிய வேதவனப்பெருமானை வழிபடுவதோடு பெருமானுடைய விஷேட வைபவங்களையும் உபயமாக நடாத்தி வந்துள்ளார்கள். ஆலயத்தின் வளர்ச்சி திருப்பணிகள் மூலமும் விஷேட விழாக்கள் மூலமும் நன்கு நடைபெற்று வந்தது. இவ்வண்ணம் நடைபெறும்கால் 1962-ம் ஆண்டளவில் எமது தந்தையார் மறையவே அவருடைய மகனாகிய நான் (சோமசுந்தரக்குருக்கள்) திரு. நடேசையா அவர்கள் நித்திய பூஜையைச் செய்துவர நைமித்திய விழாக்களை தொடர்ந்து நடாத்தி வந்தேன். ஆலயம் நன்றாக வளர்ந்து வந்தது. 1971-ம் ஆண்டளவில் சைவக்குருக்களான திரு. நடேசையா அவர்கள் மறையவே ஆலய நிர்வாகம், பரிபாலனசபை என்பவற்றின் அனுசரணையோடு நித்திய பூஜையையும் நைமித்திய விழாக்களையும் நானே நடாத்தி வந்தேன். ஆலயத்தின் திருப்பணியை முன்னிட்டு பரிபாலனசபை முன்னேற்ற மடைந்து ஆலயத்தை வைரக்கல்லால் அமைக்க எண்ணிப் பெருமானுடைய திருவருளோடு ஆரம்பித்தார்கள். 1980-ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு வைரக்கல் திருப்பணி நடைபெற்று 1981-ம் ஆண்டு ஆனிமாதம் அத்த நட்சத்திரத்தன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து நித்திய பூஜை நைமித்திய விழாக்கள் என்பன நன்றாக நடைபெற்று வந்தது. குறிப்பாக மாதசதுர்த்தி, தைப்பூசம், மகாசிவராத்திரி, சித்திரை முதல் ஆனிவரை கந்தபுராணபடனச்சிறப்பு வைபவங்கள், ஆனி அத்தம் மகா கும்பாபிஷேக தினம், ஆவணி விநாயக சதுர்த்தி ஐப்பசி மாதக் கந்தசஷ்டி, கார்த்திகை மாதம் கார்த்திகை தீபம், அதைத் தொடர்ந்து விநாயகவிரதம் இருபத்தொரு நாட்கள் இலட்சார்ச்சனை வைபவம், நிறைவு நாளன்று மகாகணபதி ஹோமம், மார்கழி மாதம் திருவாதிரை நன்னாள் உற்சவம் என்பன நன்றாக நடைபெற்று வந்தன. முன்பு நடைபெற்ற திருவாதிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவம் பெருமானின் திருவருளோடும் அடியார்களின் வேண்டு கோளின்படியும் மாலையில் நடைபெற்று வந்த உற்சவம் காலையில் அபிஷேகம் பூஜைகளுடன் ஆரம்பித்து ஒன்பதாம் நாளன்று தேர்த்திருவிழா, பத்தாம் நாள் தீர்த்தத்திருவிழா என்ற ரீதியில் நடைபெற்று வந்தது. இன்றும் அவ்வண்ணமே நடைபெற்று வருகின்றது.

1983-ம் ஆண்டு ஆலயத்தின் ஸ்நபன மண்டபத்தின் வலதுபுறம் ஸ்ரீ சந்தானகோபாலர், இடதுபுறம் முருகப்பெருமான் ஆகியோரின் ஆலயங்கள் வைத்திய கலாநிதி திரு சி.அருளானந்தம் அவர்கள் குடும்பத்தினரால் உபயமாகச் செய்யப்பட்டு கார்த்திகை மாத அத்த நட்சத்திரத்தன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்காலங்களில் ஆலயத்திற்கு ஒருபெரிய உற்சவ விநாயகர் திருவுருவச்சிலை வேண்டும் எனும் எண்ணம் அடியார்களின் மனதில் உதித்து ஆவணி மாதம் விநாயக சதுர்த்தி பரம்பரை உபயகாரரான கல்வயல் வேலுப்பிள்ளை விநாசித்தம்பி குடும்பத்தினர் அத்திருப்பணியை ஏற்று விநாயகர் திருவுருவச் சிலையை நிர்மாணித்து மகாகும்பாபிஷேகத்தையும் செய்வித்தார்கள். அதேபோன்று கந்தபுராணபடன விஷேட வைபவங்களை முன்னிட்டு வள்ளி தேவசேனா சமேதரான ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுடைய திருவுருவச்சிலையும் அமைய வேண்டுமென்று எண்ணித் தைப்பூச உபயகாரரான திரு.குமாரசாமி சின்னத்தம்பி அவர்கள் குடும்பத்தினர் உபயமாகச் செய்வித்து மகாகும்பாபிஷேகம் செய்வித்தார்கள்.

1985-ம் ஆண்டு பெருமானுடைய திருவருள் வாக்கின் மூலம் ஆலயத்திற்கு பெரிய காண்டாமணி இலண்டனிலிருந்து வரவழைக்கப்பட்டு உயரமான மணிக்கோபுரம் அமைக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. அம்மணியின் ஓசை சாவகச்சேரி நகரம்வரை கேட்கத்தக்கதாக அமைந்திருந்தது. இவ்வண்ணம் ஆலயத்தின் நித்திய நைமித்தியங்கள் விழாக்கள் என்பன நன்கு முன்னேற்றமாக நடைபெற்று வந்தது. ஆலயத்தின் விழாக்களில் முக்கியமான தேர்திருவிழாவிற்காக அமைந்த தேர் மிகவும் பழமை வாய்ந்தது. அத்தேர் பழுதடையும் நிலையில் புதிய சித்திரத்தேர் ஒன்று உருவாக்கவேண்டும் எனும் எண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் திருவருளுடன் ஏற்பட்டு திருப்பணி சபையினர், அறங்காவலர், அடியார்கள் அனைவரும் இணைந்து 1991-ம் ஆண்டளவில் சிற்பக்கலைச் செல்வன் மட்டுவிலூர் திரு. கி. கலாமோகன் அவர்களைக்கொண்டு பெரும்பொருட் செலவில் உருவாக்கப்பட்டு தேர்த்திருவிழா நடைபெற்றது. ஆலயத்தின் விழாக்காலங்களில் திரு. முருகேசு அவர்களின் காலத்திலிருந்து சாவகச்சேரி பிரபல தவில் வித்துவான் திரு. முருகப்பா அவர்களும் அவர்கள் பரம்பரையாக நாதஸ்வர வித்துவான் திரு. பஞ்சாபிகேசன் அவர்களும் அவர்கள் புதல்வர்களும் தொடர்ந்து மங்கல இசையை வாசித்து தேவஸ்தான ஆஸ்தான வித்துவான்களாக அமைந்திருந்தார்கள். இது ஆலயத் திற்கும் அவர்களுக்கும் ஒரு பெருமை. அத்தோடு திருவெம்பாவை பத்து நாட்களும் திருவிழா நிறைவுற்றதும் சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்று வந்தமை கண்கூடு.

இவ்வாறு ஆலய வளர்ச்சி பலவகையிலும் நன்றாக நடைபெற்று வரும் காலத்தில் நாட்டில் நடைபெற்ற அநர்த்தங்கள் காரணமாக பூஜை வழிபாடுகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டன. இருந்தும் அடியார்கள் மனந்தளரவில்லை. ஆலயத்தை மீண்டும் புனரமைப்புச் செய்து 1986-ம் ஆண்டு திருப்பணிகள் நடைபெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. நித்திய, நைமித்தியங்கள் வழமை போல் நடைபெற்று வந்தன. காலமாற்றங்கள் சில மாற்றங்களை ஏற்படுத்தினாலும் பூஜைவழிபாடுகளில் எந்தவித மாற்றமும் ஏற்பட வில்லை. ஆலய அறங்காவலர், பரிபாலன சபையினர், அடியார்கள் அனைவரும் இணைந்து 1997-ம் ஆண்டளவில் எமக்கொரு பாராட்டுவிழா நிகழ்த்தி தங்கப்பதக்கம் சூட்டி வேதாகமஜோதி எனும் கௌரவப்பட்டம் வழங்கி கௌரவித்தார்கள். இந்தக் கௌரவம் வேதவனப்பிள்ளையாருக்கும் அவர் அடியார்களுக்குமே உரித்தானது

ஆலய நித்திய நைமித்தியங்கள் வழமைபோல் நடைபெற கால மாற்றங்களினால் ஆலயத்தின் முக்கியமான பெரியார்கள் மறையவே அவர்களுடைய பரம்பரையினர் திருப்பணி, திருவிழா, உபயங்கள் என்பவற்றை நடாத்தி வந்தார்கள். 1999-ம் ஆண்டுடன் எமது ஆலய தெய்வீகப்பணியும் நிறைவடைந்தது. எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜைவழிபாடுகள் எல்லாம் தொடர்ந்து நடைபெற்று வந்தன. அறங்காவலர் அவர்கள் மறையவே அவரது புதல்வர் திரு. க. தங்கராஜா அவர்கள் ஆலய நிர்வாகத்தையும் பூஜை ஒழுங்கு களையும் தொடர்ந்து கவனித்து வருகின்றார். அடியார்களும் அவ்வண்ணமே வழிபாடுகள், திருப்பணிகள், என்பவற்றை கவனித்து வருகின்றார்கள். குறிப்பாக பண்டிதர் திரு. வேலுப்பிள்ளை அவர்கள் குடும்பத்தினர் தொடர்ந்தும் ஆலயத்தின் இராஜகோபுரம், அன்னதான மண்டபம் ஆகிய திருப்பணிகளை ஆரம்பித்து நடாத்தி வருகின்றார்கள். வேதவனப்பிள்ளையார் அந்தந்தக் காலத்திற்கேற்ப எல்லாவற்றையும் நடாத்திவருகின்றார். இது அவருடைய தனிப்பெருங்கருணை. அடியார்களும் அவ்வண்ணமே வழிபட்டு வருகின்றார்கள்.

ஆலயத்தில் பிள்ளையார் கதை இருபத்தொருநாள் விழாவிலே இருபதாம்நாள் கஜமுகாசுரசம்காரம் நடைபெற்று வருகின்றது. இவ்வுபயத்தை புராணமேதை அமரர் சி.அப்பாக்குட்டி அவர்களின் இளைய புதல்வர் திரு.அ.செல்வராஜா குடும்பத்தினர் நடாத்தி வருகின்றார்கள். சில வருடங்களுக்கு முன்பு (2006-ம் ஆண்டு) கஜமுகாசுரனை புதிதாக அவர்களே உபயமாகச் செய்து கொடுத்துள்ளார்கள். திரு அ. செல்வராஜா அவர்கள் எம்முடன் கூடப்படித்தவர். எமது நண்பரும் ஆவார். அவர் இந்த உபயத்தன்று வேதவனப் பெருமானின் வரலாற்றோடு ஒரு மலர் வெளியிட வேண்டுமென்று எம்மிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இவ்வரலாற்றைத் தொகுத்துக் கொடுத்துள்ளேன். இதுவும் வேதவனப்பெருமானின் திருவருளேயாகும்.

**எம்மனத்திலிருந்து சிலவரிகள்.**

வேதவனப்பிள்ளையார் கோவில் பூஜை, வைபவங்கள் 1962-ம் ஆண்டு முதல் ஆரம்பித்த காலத்திலிருந்து 1999-ம் ஆண்டுவரை நடைபெற்ற காலங்களில் எமக்கு உறுதுணையாக இருந்தவர்கள் எமது மைத்துநர் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்களும், எமது சகோதரர் சிவஸ்ரீ கி.சதாசிவசர்மா அவர்களுமே. இருவர் சேவைகளும் அளவிடற்கரியது. அவர்கள், பெரியவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைமிக்கவர்கள். அவர்கள் என்றும் நினைவைவிட்டு நீங்காத வர்கள். அடுத்து ஆலய அறங்காவலர் அமரர் திரு. வா. கதிரேசபிள்ளை அவர்கள் இக்காலங்களில் காட்டிய அன்பும் பரிவும் பேருதவிகளும் அளவற்றது. அவரும் மனதைவிட்டு அகலாதவர். அதேபோன்று முன்பு குறிப்பிட்ட பெரியார்கள் ஆலய அடியார்கள் எம்மீது கொண்ட குருபக்தியினாலும் அன்பினாலும் மனதைவிட்டு என்றும் அகலாதவர்கள் இதைவிட வேதவனப்பெருமானின் கருணையோ அளவிடற்கரியது. அவர் எத்தனையோ விதத்தில் எம்மை உயர்த்தி நன்னிலைக்கு உயர்த்தியவர். அப்பெருமானின் திருவடிகள் வாழ்க. பெருங்கருணையும் வாழ்க.

**வாழ்க சீரடியார் எல்லாம்.**

"வேதவனத்து விநாயகனைத்தொழ வாழ்வு மிகுத்துவரும்"

வாழ்க வளர்க வணக்கம்

இவ்வண்ணம்

விநாயகர் திருவருள் முற்கொண்டு

**கி. சோமசுந்தரக்குருக்கள்** (மட்டுவில்)

42/11 சுவிசுத்தாராம றோட்,
வெள்ளவத்தை , கொழும்பு-06
T.P. 0112-365149



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் பிரதமகுருவின் பாராட்டு விழாவின் போது
மட்டுவில்
சிவஸ்ரீ கி.சோமசுந்தரக் குருக்கள் தம்பதியினர்



கஜமுகாசுரன் உபயகாரருடன் சிற்பக் கலைஞர்
கருணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி - கல்வயல்

## அருள்மிகு வேதவன விநாயகர் மீது

பாடப்பெற்ற

# திருவூஞ்சற்பாடல்கள்.

சீராரும் பிரணவமே பீடமாகச்
சிறப்பாரு முபநிடதம் பலகையாகப்
பேராரும் மந்திரங்கள் தவிசதாகப்
பிறக்குமுயர் சக்திகளே விட்டமாகச்
சேராரும் பலகலைகள் கயிறதாகச்
செய்தமைத்த ஊஞ்சன்மிசை வீற்றிருந்து
வேராரும் பலாமலிகல் வயலூர் மேவும்
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்.

பரிதியுடன் மதிதானுங் குடைகள் தாங்கப்
பகர் காலோன் பரிவுடனே கவரிவீச
விரிதிரைசே ரிறையால வட்ட மேந்த
விண்ணவரும் மண்ணவரும் விரும்பி ஏத்த
அரியபல நடனங்கள் அரம்பை மாதர்
ஆடல்செய நாரதர் தும்புரு தாம் பாட
விரியுமருட் கல்வயலூர் கோயில் கொண்ட
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்

பூதகண நாதர்கள் புகழ்ந்து போற்றப்
புண்ணிய நல்லடியார்கள் போற்றி செய்யக்
கீதவிசை பற்பலவும் கிளர்ந்து விம்மக்
கின்னரர் யாழ் மீட்டியெழு பண்கள் பாட
நாதவொலி நாற்றிசையும் நணுகி யோங்க
நற்றவர் வாழ் கல்வயலூர் கோயில் கொண்டு
வேதவொலி அந்தணர்கள் விரும்பி ஏத்த
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனுடன் மாலவனும் விரும்பி ஏத்த
விண்ணவரும் இந்திரனும் வியந்து போற்ற
நாதனென நல்லவைங் கரத்தினோடு
நல்மாணும் பிரணவத்தின் உருவு தாங்கிப்
போதமவை உயிர்களுக்குப் பொருந்த நிற்கும்
போற்றுகய முகத்தவனே புலவோர் வாழும்
மேதகவார் கல்வயலூர் கோவில் கொண்ட
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்

சிந்தைதனில் நினைந்தவைகள் சிறந்து முற்றிச்
சிவகதியிற் சேர்க்கின்ற செம்மை சான்ற
அந்தமிலா அருள் மிகுந்த முருகன் மேலாம்
ஆறுபடை வீடுடையோன் அருளினாலே
வந்தகந்த புராணமெனும் அமுதையோதி
மகத்துவமாய் மக்கள் பலர் மகிழ்ந்து வாழும்
விந்தைமிகு கல்வயலூர் கோயில் கொண்ட
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்

திருமாலும் நான்முகனுஞ் சிறந்து போற்றிச்
செய்தொழில் களவைபெற்றுத் திகழ்ந்து வாழ
உருகார் வத்தோடு பெரிதுவந்து போற்ற
உவமனிலா அருள்பொழிந்து வாழுகின்ற
பெருமானே ஏரம்பா பிரணவத்துப்
பேசரிய பொருளானே ஔவை வேண்ட
விரைவினிலே கயிலைதனிற் கொண்டு சேர்த்தீர்
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்

நான்மறையி னுட்பொருளே நாதா விண்ணோர்
நாயகனே நலமிக்க அகத்தியர்க்குத்
தேன்மிக்க கொன்றையணி சிவனாரீந்த
தீர்த்தநிறை கமண்டலத்தைக் கவிழ்த்தே அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்போற்று மிந்திரனுக் கருளி நின்றீர்
வயங்குநல பனசதல விருட்சமேவும்
மேன்மைதிகழ் கல்வயலூர் கோயில் கொண்டீர்
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்

தேவர்தமக் கருள்சுரந்த கருணை தோன்ற
சித்திபுத்தி தமைமணந்த சீர்மை தோன்ற
ஏவர்களுந் தொழுதேத்து மடிகள் தோன்ற
எம்மரிய வினைநீக்கும் அருளுந் தோன்ற
மூவர்க்கும் முதலான முதன்மை தோன்ற
முக்கண்கள் பொழிகருணை முழுதுந் தோன்ற
மேவலர்க்கும் அருள் சுரக்கும் மேன்மை தோன்ற
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்

செஞ்சடைசேர் திருமுடியீர் ஆடீரூஞ்சல்
சேருமொரு நாற்புயத்தீர் ஆடீரூஞ்சல்
மஞ்சுதிகழ் மதியணிவீர் ஆடீரூஞ்சல்
மாலயனுக் கருள்புரிவீர் ஆடீரூஞ்சல்
கஞ்சநிகர் சேவடியீர் ஆடீரூஞ்சல்
கடவுளருக் கருள்புரிந்தீர் ஆடீரூஞ்சல்
விஞ்சுபுகழ்க் கல்வயலூர் மேவிவாழும்
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்

வல்லபைசேர் பாகத்து மணாளா போற்றி
வணங்குமவர்க் கருள்புரியும் வாழ்வே போற்றி
சொல்லரிய பூதகண நாதா போற்றி
தொழுவார்கள் துயர்தீர்க்குந் தேவே போற்றி
கல்வயலூர்ப் பனசதலக் கடவுள் போற்றி
கந்தனருட் புராணமது காப்பாய் போற்றி
வெல்லுமொரு திருமருப்பு வீரா போற்றி
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழி

திருவளரும் நான்மறைகள் சிறந்து வாழி
சீரியநல்லாகமங்கள் சிறந்து வாழி
உருவளரும் பூதிமணி அணிவோர் வாழி
உயர்திருவளர் ஐந்தெழுத்தாற் பணிவோர் வாழி
பொருள்வளரும் முகில்வாழி ஆன்கள் வாழி
போற்றரசன் செங்கோலாற் பொலிந்து வாழி
அருள்வளருங் கல்வயலூர் வாழி வாழி
ஆங்கருளும் விநாயகர்தாள் வாழி வாழி

எச்சரிக்கை

சீரான்சிவ னுமைதந்தருள் செல்வா எச்சரிக்கை
சிறியேங்களை ஆளும் அருட்டேவே எச்சரிக்கை
பாராரிடர் தீர்த்தேயருள் பகவா எச்சரிக்கை
பணிவோர்தமக் கருளீந்திடு பாலா எச்சரிக்கை

பலவார்தரு தலமோங்கிடு பதியே எச்சரிக்கை
பரமன்திரு வருளாய்வரு பொருளே எச்சரிக்கை
நல்கல்வயல் நகர்மேவிய நம்பா எச்சரிக்கை
நளினத்தவன் மாலோன்தொழு நாதா எச்சரிக்கை

கந்தன்தனை முந்தன்பொடு காத்தாய் எச்சரிக்கை
கருதுமவன் சரிதம்வளர் நகராய் எச்சரிக்கை
பந்தம்வினை தீர்த்தேயருள் பகவா எச்சரிக்கை
பனசதலம் வாழேரம்ப மூர்த்தி எச்சரிக்கை

பராக்கு

ஆருவின்மே லேறியரு ளன்பா பராக்கு
ஐந்துகரத் தும்பிமுக ஐயா பராக்கு
சேருவுடைத் திருவடி சேர் தேவா பராக்கு
செங்கணவன் போற்றுதிரு மருகா பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனாம் மூத்தோனே ரம்பா பராக்கு
அநுதினமும் அருள்பொழிமுக் கண்ணா பராக்கு
சங்கரனார் உமை மகிழுந் தலைவா பராக்கு
தரணியெலாந் தொழவருளுந் தலைவா பராக்கு

சொல்லவருள் சொரியுமருட் செல்வா பராக்கு
தோகையுமை நாதனருள் செல்வா பராக்கு
கல்வயலூர் மேவுகண நாதா பராக்கு
கருதுமருள் சொரியும் முக்கண்ணா பராக்கு

**லாலி**

ஒற்றையணி மருப்பினரே லாலி சுபலாலி
ஓங்கார உருவினரே லாலி சுப லாலி
கற்றவர்வாழ் கல்வயலீர் லாலி சுப லாலி
கணபதியாம் முக்கணரே லாலி சுப லாலி
கொற்றவருக் கருள்புரிவீர் லாலி சுப லாலி
கோகனத்துப் பதமலரீர் லாலி சுபலாலி
வெற்றியெலாந் தந்தருள்வீர் லாலி சுபலாலி
வேதவன விநாயகரே லாலி சுப லாலி

**மங்களம்**

திருவாரும் விநாயகர்க்கு ஜெய மங்களம் சிவ
பிரானார்க்குந் தேவிக்கும் சுப மங்களம்
தேவர்சிறை மீட்டருளுஞ் செய்யதிரு முருகனுக்கும்
காவல்புரிந் துயிர்புரக்கும் கருதரிய பைரவர்க்கும்
ஓவறநல தேவர்தமை ஒறுத்தவீர பத்திரர்க்கும்
மேவுநல பத்திரைக்கும் மேலான தேவர்கட்கும்
மங்களம் ஜெயமங்களம் மங்களம் சுப மங்களம்
மங்களம் மங்களம் மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதனைகள் நீக்கும் வேதவனன்



(ஆலயச் சிறப்புக்கள் கூறும் கவிகள்)

### காப்பு

சீர்விளங்கு கல்வயலில் சிறப்பாய்க் கோயில்கொண்ட
பேர்விளங்கு வேதவனன் புகழ்பாட-சீர்கொம்பு
ஒன்றுடைய ஓரானை முகத்தானே யெனக்கு
என்றுமே இங்குக் காப்பு

காராளர் சூழ்ந்திலங்கு கல்வயற் பதிமேவும்
பேரான வேதவனன் புகழ்கூறச்- சீரான
நல்லருளே யெவர்க்கும் நல்கிடும் நாயகனாம்
வல்லகண பதியேயெனக்குக் காப்பு

நெல்வயலும் நீர்நிலையும் நிறைந்திடும் ஊராம்
கல்வயலிற் குடியமர்ந்த கணபதிதன் - நல்லருளை
எங்கும்பரப்பிட எண்ணிடும் எந்தனுக்கு நீயே
பங்கம் வாராமற் பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பு

மூர்த்திதலம் தீர்த்தமென முறையான சிறப்பெலாம்
சீர்பெறவே கொண்டிட்ட சிறப்புடைத் தலமாம்
பேர்பெறும் வேதவனப் பிள்ளையார் ஆலயம்
சீர்பெருகு கல்வயலிற் சிறப்புறவே உள்ளதுவே

சாவகச் சேரியெனச் சாற்றிடும் ஊரதனில்
நாவன்மை கொண்ட நல்லடியார் வாழும்
பாவலர்கள் போற்றும் பண்புநிறை கல்வயலில்
காவலனாய் வீற்றிருக்கும் கணபதியே சரணம்

ஆண்டினில் வருகின்ற அதிசிறந்த நாளெலாம்
வேண்டியே அடியவர் விழாவெடுத்து மகிழும்
காண்டரிய காட்சியினை கல்வயலில் கண்டுமே
வேண்டும் அடியவர்தம் வினையெலாம் அறுமே

பண்டிதர் புலவரெனப் படித்தவர் ஏராளம்
எண்டிசையும் புகழும் எழிலார் கல்வயலின்
மண்சிறக்க வந்தமர்ந்த வாரண முகத்தோனை
அண்டியே வாழ்பவர் ஆனந்தம் பெறுவரே

நெல்வயலும் நீள்பனந் தோப்புகளும் நிறைந்திடும்
கல்வயலிற் குடிகொண்ட கணபதியாம் வேதவனன்
சொல்லரிய புகழ்கொண்டு சூழுமிப் புவியதனில்
நல்லருளே நல்கிடுவான் நம்பினோர் கெடுவதில்லை.

நிலம்புகழ் கல்வயலில் நின்றருளும் வேதவனத்
தலம்நிறை அடியவரும் சார்ந்திட்ட தொண்டருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்வர வீதியுலா வந்தருளும் விநாயகரின்
அலங்கார உற்சவம் ஆதிரைநாள் நிறைவேறும்

அலங்காரப் பூசைகளும் அன்னதான நிகழ்வுகளும்
நலந்திகழ நிறைவேறும் நல்லதொரு ஆலயம்
மலமகலப் பணிந்து மனதார வழிபட்டால்
நலமெலாம் நல்கியே நம்பனவன் அருள்வான்

கார்த்திகையின் கார்த்திகை கழிந்திட்ட மறுநாளில்
பேர்விளங்கு விநாயகர் சஷ்டியது ஆரம்பம்
ஊர்சிறக்க நாளாந்தம் உயரிலட்ச அர்ச்சனையும்
பேர்விளங்கு பிள்ளையார் கதைபடிப்பும் அரங்கேறும்

பெருந்துன்பம் விளைத்திட்ட பேரரக்கன் கஜமுகனை
ஒருகொம்பை உடைத்துமே உறுதியாய் எறிந்து
செருவினிலே கொன்றிட்ட சிறப்பான காட்சியது
இருபதாம் நாளன்று இனிதாய் அரங்கேறும்

இறுதிநாள் சதயமும் இனியநற் சட்டியதும்
சிறப்பாய் இணைந்த சீர்மிகும் நாளதனில்
உறுசிறப்பு கொண்டிட்ட உத்தமப் பெருயாகம்
சிறப்பாய் நடந்திடக் காண்போர் ஏராளம்.

மார்கழியிற் திருவெம்பா மகத்தான உற்சவத்தால்
பேர்பெறும் வேதவனன் பெருமகிழ்வு கொள்வான்
ஊர்சிறக்க நாளாந்தம் உள்வீதி வெளிவீதி
சீர்சிறப்பாய் வலம்வந்து சிந்தையது மகிழ்வான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துநாள் உற்சவம் பாங்குடனே அரங்கேறும்
சித்தம் மகிழ்ந்திடவே சீரடியார் தொழுதிடுவர்
நித்தம் அபிடேகம் அலங்காரம் எல்லாமே
உத்தமக் குருமாரால் உடனுடனே நிகழ்ந்திடும்

மங்கல வாத்தியங்கள் மந்திர கோசத்துடன்
எங்கள் கணபதியின் எழிலார் வீதியுலா
திங்களாம் மார்கழியின் திகழ்பத்துத் தினமும்
மங்களமாய் நிறைவேறி மனமகிழ்வு தந்திடுமே

திருவெம்பாவை யெனும் சிறப்புடைக் காலத்தில்
பெருமையுறு விழாக்கோல சிறப்பினையே கண்டு
பெருமகிழ்வு கொள்ளும் பேரடியார் கூட்டம்
பெருகிடுமே ஆலயத்தில் பெட்புடனே நாளும்

மாதமொரு சதுர்த்தியுடன் வருவிரத நாளெலாம்
ஏதமது இன்றியே யுயர்பூசை காணலாம்
வேதனைகள் நீங்கிடவே வேண்டிடும் அடியவர்
சீதமது பெற்றுமே சிறப்படைவர் நாளெலாம்

பத்திப் பரவசமாய் பார்த்துமே அடியார்கள்
நித்தம் அவனருளை நிறைவாய் பெற்றிடுவர்
சித்தம் மகழ்ந்திடவே சிறப்பான பாடல்கள்
தித்திக்கச் செவிமடுத்து திகழின்பம் பெறலாமே.

முந்தும் புகழுடைய முதுபெரும் குருமாரின்
சந்தம் பிழைத்திடா மந்திரங்கள் முழங்கும்
சுந்தரப் பூசைகளும் தூயநல் விழாக்களும்
சிந்தையது மகிழும் சிறப்பான நிகழ்வுகளாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பமும் மோதகமும் அவலுடன் எள்ளுண்டையும்
செப்பமாய் தானுண்டு சிந்தையது மகிழ்ந்துமே
முப்பொழுதும் எம்குறையை முடித்திடத் தான்முயலும்
அப்பனாம் விநாயகனின் அடியிணையைத் தொழுவமே.

வேதமொடு ஆகமமும் விளங்கு திருமுறைகளும்
நாதமொடு இசைத்திடும் நாவன்மை கொண்டோர்
காதலொடு அப்பணியைக் கருத்துடனே செய்யும்
ஏதமில் நிகழ்வது எந்நாளும் அரங்கேறும்.

காலைமாலை யெனக் கவினார் இருவேளை
வேலவன் உடனமர் வேதவனன் தனக்குமே
சீலமிகும் பூசனையும் செப்பார் உபசரணையும்
ஞாலமது சிறந்திடவே நடந்திடும் நாளெலாம்

மாதமெலாம் வருகின்ற மகத்தான தினமெலாம்
வேதவனப் பதிதன்னில் வெகுசிறப்பு பூசைகளாம்
காதலித்து அவனடியைக் கைதொழுது வந்திட்டால்
வேதனைகள் தானகலும் வெந்துயரும் தீர்ந்திடுமே.

வேதமொடு ஆகமங்கள் விளங்குநற் புராணங்கள்
நாதமொடு ஒலித்திடும் நல்லதோர் ஆலயமாம்
வேதவனப் பதிவந்து வேண்டும் வரம்பெற்று
ஏதமில் வாழ்வதனை எந்நாளும் வாழுவமே

கந்தன் பெருமைதனைக் கவினுறவே விளக்கும்
கந்தபுரா ணமொடு கவினார் பெரிய புராணமும்
சிந்தைக் கினியநற் திருவிளையாடற் புராணமும்
சந்தம்பெருக நற்பயன் சொல்லிப் படித்திடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஜனைப்பாடல்கள்

**அன்புருவாய் வந்திடையா.........................**

| | |
|---|---|
| அன்புருவாய் வந்திடையா | ஆனைமுகத்தோனே |
| ஆறுமுகன் சோதரனே | ஆனைமுகத்தோனே |
| அருள்வழங்கி மகிழ்விக்கும் | ஆனைமுகத்தோனே |
| அறுகம்புல் விரும்பிடும் | ஆனைமுகத்தோனே |
| ஐங்கரங்கள் கொண்டவனே | ஆனைமுகத்தோனே |
| ஆறுதலைத் தந்திடையா | ஆனைமுகத்தோனே |
| பட்டதுயர் போதுமையா | ஆனைமுகத்தோனே |
| பாவியெமைக் காத்திடையா | ஆனைமுகத்தோனே |
| மோதகத்தை விரும்பிடுவாய் | ஆனைமுகத்தோனே |
| மூஷிகத்தில் ஏறிவரும் | ஆனைமுகத்தோனே |
| சொத்திழந்தோம் சுகமிழந்தோம் | ஆனைமுகத்தோனே |
| சூழ்துயரைத் தீர்த்திடையா | ஆனைமுகத்தோனே |
| உன்னடியே சரணடைந்தோம் | ஆனைமுகத்தோனே |
| உயர்வாழ்வு தந்திடையா | ஆனைமுகத்தோனே |
| வேதனைகள் தீர்த்தருளும் | ஆனைமுகத்தோனே |
| வேதவனப் பதியமர்ந்த | ஆனைமுகத்தோனே |
| கணங்களுக்கு அதிபதியே | ஆனைமுகத்தோனே |
| கல்வயலின் காவலனே | ஆனைமுகத்தோனே |
| ஆற்றங்கரை அமர்ந்திடுவாய் | ஆனைமுகத்தோனே |
| அல்லலெலாம் அறுத்திடுவாய் | ஆனைமுகத்தோனே |
| உலகத்தின் முதற்பொருளே | ஆனைமுகத்தோனே |
| உன்பாதம் சரணடைந்தோம் | ஆனைமுகத்தோனே |
| துயரெலாம் கூறிவிட்டோம் | ஆனைமுகத்தோனே |
| துதிக்கையால் காத்திடுவாய் | ஆனைமுகத்தோனே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வயலின் மக்களெல்லாம்........................

கல்வயலின் மக்களெல்லாம் தங்கள்குறை தீர்த்திடவே
வேதவனம் சென்றிடுவார் பாரீரோ-அங்கு
கணபதிதன் கழலடியைத் தொழுதெழுந்த பின்னரேதான்
மனமகிழ்ந்து வீடுசெல்வார் பாரீரோ
மனமகிழ்ந்து வீடுசெல்வார் பாரீரோ

கல்வயலின்......

கொடுமைபுரி கஜமுகனைக் கொன்றொழித்த பின்னரேதான்
இடுக்கணின்றி வாழுகின்றோம் தாலேலோ-அந்த
இன்பநிலை தொடர்ந்திடவே இவனடியைப் போற்றிநிதம்
மனங்குளிரப் பாடிடுவோம் வாரீரோ
மனங்குளிரப் பாடிடுவோம் வாரீரோ

கல்வயலின்......

அம்மையப்பன் உலகமென்று அவனிமிசைக் காட்டிடவே
அவரடியை வலம்வந்தான் கேளீரோ-அந்த
மாங்கனியைப் பெற்றுண்ட மகிழ்வோடு அவனிருக்க
நாங்களெல்லாம் வாழ்ந்திடுவோம் வாரீரோ
நாங்களெல்லாம் வாழ்ந்திடுவோம் வாரீரோ

கல்வயலின்......

வேதவனன் தாள்பணிய வேதனைகள் போயகலும்
தீங்கின்றி வாழ்ந்திடலாம் வாரீரோ-அவன்
இன்னருளைப் பெறுவதற்கும் இன்முகத்தைப் பார்த்திடவும்
கல்வயலை நாடிநீரும் வாரீரோ
கல்வயலை நாடிநீரும் வாரீரோ

கல்வயலின்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வயலிற் கோவில்கொண்ட கணபதியே.......

கல்வயலிற் கோவில்கொண்ட கணபதியே எங்கள்
கவலையெலாம் தீர்த்திடையா கணபதியே
அல்லலெல்லாம் அகற்றியெமைக் கணபதியே
அவனிமிசை ஏற்றிடுவாய் கணபதியே

வேதவனன் எனநாமம் கொண்டவனே விநாயகா
வேதனைகள் தீர்த்தருள வேண்டுமையா விநாயகா
காதலுடன் உன்னடியிற் கரங்குவித்தோம் விநாயகா
நோதலின்றிக் காத்திடணும் வேழமுக விநாயகா

கந்தனுக்கு உதவிடவே கஜமாக வடிவெடுத்தாய்
உந்தனருள் வேண்டிநிதம் உன்னடியே பணிந்தோம்
வந்ததுயர் தீர்த்தருள வேண்டுகிறோம் விநாயகா
சிந்தையது மகிழ்ந்திடவே சீரருளைத் தருவாயே

நோய்கள் எமையண்டாமல் நொந்துமனம் வாடாமல்
சேய்கள் எமைக்காத்திட சிந்தையது கொள்வாய்
வாய்நிறையப் புகழ்பாடி வந்தித்தோம் உன்னை
சாய்ந்திட லின்றியெமைச் சகமீதுயர்த் திடுவாய்

அல்லும் பகலுமுன் அருளினையே வேண்டி
பொல்லா வினையகலப் பூசித்தோம் உன்னை
எல்லாத் துயரும் எல்லா வினைகளுமிங்கு
நில்லாது ஓடிடவே நீயருள்வாய் கணபதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா

கல்வயலில் குடியமர்ந்தாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
கந்தனுக்கு மூத்தவனே பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
நல்லருளை நல்கிடுவாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
நாநிலத்தில் உயர்த்திடுவாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
கணங்களுக்கு அதிபதியே பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
கஜமுகனை அழித்தவனே பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
கருணைமுகங் கொண்டவனே பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
காத்தருள்வாய் எங்களையே பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
வேதனைகள் தீர்த்தருள்வாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
வேதவனப் பதியமர்ந்தாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
வெற்றியை எமக்கருள்வாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
வேழமுகங் கொண்டவனே பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
சிவனுமையின் தலைமகனே பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
சித்திபுத்தி மணாளனே பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
சீர்மையெலாந் தந்திடுவாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
ஔவைக்கருள் புரிந்தவனே பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
ஆற்றங்கரை அமர்ந்தவனே பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
மோதகத்தை விரும்பிடுவாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
மோட்சமதை நல்கிடுவாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
அறுகம்புல்லால் அர்ச்சித்தால் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
அருள்வாரி வழங்கிடுவாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
எங்கள்குறை தீர்த்தருள்வாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
ஏரகத்தில் உயர்த்திடுவாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
எளிமையின் வடிவினனே பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா
எங்களைக் காத்திடுவாய் பிள்ளையாரப்பா பிள்ளையாரப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேழமுகா வேதவனா வா வா வா**

வேழமுகா வேதவனா வா வா வா
வெந்துயரம் தீர்ப்பவனே வா வா வா
ஐங்கரங்கள் கொண்டவனே வா வா வா
ஆனைமுகம் கொண்டவனே வா வா வா
கந்தனுக்கு மூத்தவனே வா வா வா
கணபதியே காத்தருள வா வா வா
தொல்லைதனை தீர்ப்பவனே வா வா வா
துதிக்கை கொண்டவனே வா வா வா
முக்கண்ணா முழுமுதலே வா வா வா
மூத்தவனே முன்னவனே வா வா வா
வாடுமெந்தன் துயரறுக்க வா வா வா
வாழ்வுதனை உயர்த்திடவே வா வா வா
மூஷிகத்தில் வலம்வருவாய் வா வா வா
மோதகப் பிரியனேநீ வா வா வா
பட்டதுயர் போக்கிடவே வா வா வா
பாரதனில் உயர்த்திடவே வா வா வா
வேதவனப் பதியுறைந்தாய் வா வா வா
வேழமுகம் கொண்டவனே வா வா வா
கல்வயலைக் காத்திடவே வா வா வா
கணபதியே குணநிதியே வா வா வா
அறுகம்புல் விரும்பிடுவாய் வா வா வா
அன்புகொண்டு அழைக்கின்றோம் வா வா வா
எம்வாழ்வு உயர்ந்திடவே வா வா வா
ஏழைகளைக் காத்திடவே வா வா வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணபதி ஓம்ஜெய கணபதி ஓம்**

கணபதி ஓம்ஜெய கணபதி ஓம்
கல்வயல் பதியுறை கணபதி ஓம்
வேலவன் உடனமர் கணபதி ஓம்
வேதவனம் உறைந்த கணபதி ஓம்
கவலைகள் தீர்க்கும் கணபதி ஓம்
கஜமுகனை அழித்த கணபதி ஓம்
அச்சது பொடிசெய்த கணபதி ஓம்
அறுமுகன் சோதரா கணபதி ஓம்
வல்லபை மணாளா கணபதி ஓம்
வருதுயர் துடைப்பாய் கணபதி ஓம்
சிவனுமை பாலகா கணபதி ஓம்
வேதவனம் அமர்ந்த கணபதி ஓம்
அரக்கரை அழித்தாய் கணபதி ஓம்
அன்பின் வடிவே கணபதி ஓம்
கணபதி ஓம்ஜெய கணபதி ஓம்
கல்வயல் பதியுறை கணபதி ஓம்
சீரெலாம் தருவாய் கணபதி ஓம்
எலியதில் அமர்ந்தாய் கணபதி ஓம்
ஏழைகளைக் காப்பாய் கணபதி ஓம்
மோதகப் பிரியா கணபதி ஓம்
முக்கண் உடையாய் கணபதி ஓம்
துதிக்கை உடையாய் கணபதி ஓம்
துயரெலாம் அறுப்பாய் கணபதி ஓம்
ஐங்கரம் கொண்டாய் கணபதி ஓம்
ஆனையின் முகத்தாய் கணபதி ஓம்
எளிமையின் வடிவே கணபதி ஓம்
எமக்கருள் செய்வாய் கணபதி ஓம்
புராணங்கள் புகழும் கணபதி ஓம்
பூதங்கள் தலைவா கணபதி ஓம்
கல்வயல் பதியமர் கணபதி ஓம்
காருண்ய மூர்த்தியே கணபதி ஓம
வேதங்கள் போற்றிடும் கணபதி ஓம்
வேதவனப் பதியுறை கணபதி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மழை பொழிவாய் போற்றி

அருள்மழை பொழிவாய் போற்றி
ஆனைமுகத்து அண்ணலே போற்றி
இன்பந்தரும் இறைவா போற்றி
ஈனரை அழிக்கும் இறையே போற்றி
உமையவள் ஈன்றஉத்தமா போற்றி
ஊரெலாலம் அமர்ந்துளாய் போற்றி
எண்ணிய கருமம் முடிப்பாய் போற்றி
ஏரகம் தழைக்க உதவுவாய் போற்றி
ஒற்றைக் கொம்புடை உருவே போற்றி
ஓரானை முகத்துடை இறைவா போற்றி
கருணை பொழியும் கடவுளே போற்றி
காருண்ய மூர்த்தியேகணபதியே போற்றி
சங்கரன் பெற்ற சற்குருவே போற்றி
சான்றோர் போற்றும் முதல்வா போற்றி
தண்ணருள் புரியும் தலைவா போற்றி
தாண்டவக் கோனின் புதல்வா போற்றி
பகைவரை அறுக்கும் பரனே போற்றி
பாவலர் போற்றிடும் பொருளே போற்றி
மருப்பு ஒன்றுடை மணாளா போற்றி
மாதுமை புதல்வா மால்மருகா போற்றி
வல்வினை தீர்க்கும் வாழ்வே போற்றி
வாழ்வினை உயர்த்தும் வடிவே போற்றி
வெற்றியே நல்கிடும் வேழமுகா போற்றி
வேதவனத்துறை வேந்தே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

கல்வயலிற் கோவில்கொண்ட கணபதிக்கு மங்களம்
காருண்ய மூர்த்தியான கணபதிக்கு மங்களம்
நெல்வயலின் அருகமர்ந்த நிமலனுக்கு மங்களம்
நீடுபுகழ் கொண்டுயர்ந்த நெடியவர்க்கு மங்களம்
எங்கள் துயர்தீர்த்தருளும் ஏரம்பா மங்களம்
எளியவரைக் காத்துநிற்கும் ஏரம்பா மங்களம்
கந்தனுக்கு முன்பிறந்த கணபதிக்கு மங்களம்
சித்திபுத்தி பாகனுக்கு சிந்தைநிறை மங்களம்
சிவனுமையின் புதல்வனுக்கு சிந்தைநிறை மங்களம்
பொல்லாவினை யறுத்தருளும் புண்ணியர்க்கு மங்களம்
எல்லாப்பிழை பொறுத்தருளும் ஏரம்பா மங்களம்
எல்லையிலாக் கருணைமிகு எழிலனுக்கு மங்களம்
ஏழைகளின் காவலர்க்கு எழிலார்ந்த மங்களம்
விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகர்க்கு மங்களம்
வேழமுகம் கொண்டமர்ந்த விநாயகர்க்கு மங்களம்
வேதவனப் பதியமர்ந்த விநாயகர்க்கு மங்களம்
மங்களம் மங்களம் மங்களம்சுப மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெயமங்களம்

கவி ஆக்கம் :-

திரு. செ. சுதாகரன் (வயலூரான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கணித பதிப்பகம் - சாவகச்சேரி 021 227 0257

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org